செ.வெ.எண்: 900/2017 நாள்: 04.12.2017

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கன்னியாகுமரி மாவட்ட கூடுதல் கண்காணிப்பு அலுவலர் திரு. டி. இராஜேந்திர குமார் இ.ஆ.ப., அவர்கள் கன மழை மற்றும் சூறைக்காற்றினால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

---

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 29.11.2017 அன்று இரவு பெய்த கன மழை மற்றும் சூறைக்காற்றினால், மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மரம் பெயர்ந்து விழுந்ததால் மின்கம்பங்கள் சேதமடைந்தன. மேலும் கனமழையின் காரணமாக நகர்புற மற்றும் கிராமபுற சாலைகள் சேதம் அடைந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களின் அறிவுரையின்படி, 29.11.2017 அன்று இரவு முதல் மாவட்டம் முழுவதும் மின்சாரம் நிறுத்தி வைக்கப்பட்டது. ஏற்கனவே மழை வெள்ளம் சூழக்கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டு, அப்பகுதியில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக தங்க வைக்க, மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக பல்வேறு இடங்களில் அவசரகால மீட்பு மைய கட்டிடங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்ருந்ததால் பெரும்பாலான உயிர் சேதங்கள் தவிர்க்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட சேதங்களை பார்வையிட்டு, நிவாரண பணிகளை துரித படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி உதயகுமார் அவர்கள், மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. டி. கே. இராமசந்திரன் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், கூடுதல் கண்காணிப்பாளர்கள் திரு.டி.இராஜேந்திர குமார் இ.ஆ.ப., திருமதி.நிர்மலாசாமி இ.ஆ.ப., அவர்கள் தொடர்ந்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மேற்கொண்ட நிவாரண பணிகளை கண்காணித்தும், பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர், மின்சாரம் கிடைக்க மேற்கொண்ட பணிகள் குறித்தும் அவ்வப்போது ஆய்வு கூட்டம் நடைப்பெற்றது.

அதனடிப்டையில், கன்னியாகுமரி மாவட்ட கூடுதல் கண்காணிப்பு அலுவலர் திரு. டி. இராஜேந்திர குமார் இ.ஆ.ப., அவர்கள், தோவாளை வட்டம், ஞாலம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில், மழை மற்றும் சூறைகாற்றினால் பாதிக்ப்பட்ட ரப்பர் மர சேதங்கள், மரவள்ளிக்கிழங்கு சேதங்களையும் பார்வையிட்டார்.

பின்னர், தோமையார்புரம் பகுதிகளில் ரப்பர் மர சேதம் மற்றும் மின்கம்பங்கள் சேதமடைந்ததை பார்வையிட்டு, புதிதாக மின் கம்பங்கள் நடும் பணியினையும், நடுவூர் கிராமத்தில் லூத்ரன் தொடக்கப்பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை பார்வையிட்டு, பொதுமக்களுக்கு தேவையான உணவு, உடை வழங்குவது குறித்தும், தடிக்காரன்கோணம் பகுதியில் சேதமடைந்த வாழை மரங்கள், வயல்வெளிகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு பணிகளை, மேலும் துரிதபடுத்த சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.கன்னியாகுமரி மாவட்டம்

---